www.tamilarangam.net

# தோழர்

## கொன்சாலோ (எ) அபிமேல் குஸ்மான்

**உயிரைப் பாதுகாக்க உதவுவோம்!**

**அவரை விடுதலை செய்ய முழங்குவோம்!**




உலகில்
மீண்டும்
எழுகிறது.
புதிய தென்புடன்
உண்மைக்
கொம்யூனிஸ்டுக்களும் கொம்யூனிசமும்.

ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் உள் நாட்டு பிற்போக்கு ஆளும் வர்க்க 'பாசிச' அரசாங்கங்களுக்கும், நவகாலனிய ஆதிக்க ஏகாதிபத்தியங்களுக்கும் எதிராக மக்களின் தேசிய விடுதலை போராட்டங்களும், வர்க்க புரட்சிகளும் வீறு கொண்டு நடந்து கொண்டிருக்கிறது. கொம்யூனிஸ் கட்சியின் தலைமையில் நடக்கின்ற போராட்டங்கள், பிற்போக்கு அரசுகளுக்கும், அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்களுக்கும் பெரும் அச்சுறுத்தலைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. மீண்டும் ஒருநாட்டில் கொம்யூனிஸ்டுகள், பாட்டாளி வர்க்கத்தை ஆட்சி அதிகாரத்திற்கு கொண்டு வந்துவிடுவார்கள் என்று, உலகளவில் பயபீதியில் நடுங்கிக் கொண்டிருக்கிறது. ஏகாதிபத்தியம்:

லத்தீன் அமெரிக்க நாடான பெரு நாட்டின் பெரு கொம்யூனிஸ்ட்டு கட்சியின் தலைமையில் பெருவிய மக்கள், தமது விடுதலைக்கும் தேசிய சுதந்திரத்திற்குமாக "ஒளிரும் பாதையில்" (                ) பிஜிமோரி பாசிச அரசுக்கும், அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்களுக்கும் எதிராக மக்கள் யுத்த வழியில் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள்.

இத்தகைய மகோன்னதமான, ஒடுக்கப்பட்ட அடக்கப்பட்ட மக்களின் சாதனையை மீண்டும் ஒரு வரலாற்று எழுச்சியை திருப்பத்தை தலைமை தாங்கும் பெரு கொம்யூனிச கட்சியின் தலைவர் கொன்சாலோ (எ) அபிமேல் குஸ்மான் அவர்கள் 1992 புரட்டாதி 12ம் திகதி சி.ஐ.ஏ. இனால் வழிநடத்தப்படும் பிஜிமோரி அரசின் பொலிசார "டின்கோட்" கைதுசெய்து சிறையிலடைத்துள்ளது. இது ஏகாதிபத்தியங்களுக்கும், பிற்போக்கு வாதிகளுக்கும் ஒரு குளிர்ச்சியான செய்தி. ஆனால் உலகெங்கும் போராடும் மக்களுக்கும், மக்கள் இயக்கங்களுக்கும் தாங்க முடியாத மாபெரும் துயரச் செய்தி.

ROLETARIAT VANGUARD'S ORGANISATIO

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சர்வதேச நிதி நிறுவனங்க[...] ஏகாதிபத்தியங்களதும்
கட்டுக்கடங்காத கசக்கிப் பிழியும் சுரண்டலால் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின்,
பொருளாதார, அரசியல் நவீன காலனிய ஒடுக்குமுறைக்கு எதிராக, உள்நாட்டு
பிற்போக்கு அரசுக்கு எதிராக கொதித்தெழுந்த பெருமக்களை, அவர்களது
தேசிய சுயாதிபத்திய உணர்வை, தோழர் கொன்சாலோவும், தோழர்களும்
புரட்சிகரமான "ஒளிரும் பாதை" வழியை நோக்கி அணிதிரட்டினார்கள்.
மார்க்சிய லெனினிய மா ஓ சிந்தனைகளை பெருவின் ஸ்தூலமான நிலமைகளுடன்
பொருத்தி வழிகாட்டினார்கள். அதுமட்டுமல்லாது, பெருவிய கொம்யூனிஸ் கட்சியை
எல்லாவகை திரிபு, நவீன திரிபுகளுக்கும் சாட்டை அடி கொடுத்து, புரட்சிகர
கொம்யூனிஸ் கட்சியாக வளர்த்தெடுத்தார்கள். 'பெருவிய மக்கள் குடியரசை'
நிறுவும் பாதையில் மக்களின் ஆயுதப்படையைகட்டி, விடுதலை யுத்தத்தினை தொட-
ங்கினார்கள். 'பெருவிய கொம்யூனிஸ் கட்சி' பெருவிய மக்களின் நம்பிக்கை
நட்சத்திரமாக மாறிவிட்டது. சர்வதேச புரட்சிகர இயக்கத்தில் (        )
சிறந்த பங்கு வழங்கிக் கொண்டிருக்கிறது. இத்தனை அரும் செயல்களையும் செய்.
யும் பெரு கொம்யூனிஸ் கட்சிக்கு தலைமை தாங்கிவரும் தோழர் கொன்சாலோ
கைது செய்யப்பட்டதை எதிர்த்து, ' கொன்சாலோவின் உயிரைப் பாதுகாக்க
"விண்ணையும் மண்ணையும் உலுப்புவோம்" என்ற முழக்கத்தின் கீழ் உயிரைப் பாது
காக்கும் இயக்கத்துக்கு சர்வதேச புரட்சிகர இயக்கம் அழைப்பு விடுத்தது.
'சர்வதேச அவசரகால கமிட்டி' நிறுவப்பட்டுள்ளது. உலகின் பல பாகங்-
களிலும் கொம்யூனிஸ்ட்டுகள், தேசிய விடுதலைப் புரட்சியாளர்கள், சனநாயகவாதி
கள், மனித உரிமைவாதிகள், இவர்களது இயக்கங்கள் எல்லாம் விடுதலை செய்யக்
கோரும் இயக்கத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழீழ மக்களின் தேசிய விடுதலை
ப் போராட்டத்தை நோக்கின் அது அடிப்படையில் ஏகாதிபத்திய எதிர்ப்பு
போராட்டமாகும். அத்தோடு புதிய சனநாயகப் புரட்சியின் பகுதியுமாகும்.
தமிழீழ மக்களின் புரட்சிகரப் போராட்டத்தினூடாக வளர்ந்து வரும் மார்க்சிய
லெனினியவாதிகளும், குழுக்களும் ஏகாதிபத்தியத்தின் எதிரிகள் என்ற வகையில்
மட்டுமல்லாது, தொழிலாள விவசாய வர்க்கத்தினதும், உழைக்கும் பரந்துபட்ட
மக்களதும் முன்னோடிகள், மார்க்சிய லெனினிய மா ஓ சிந்தனைகளின் புதல்வர்
கள் உலக பொதுவுடமை இயக்கத்தின் சகோதரர்கள் என்ற மகோன்னத
உறவினால் பிணைக்கப்பட்டவர்கள்.

தோழர் கொன்சாலோவின் உயிரை பாதுகா
க்கும் இயக்கத்தில், தோழர் கொன்சாலோவை விடுதலை செய்யப்பட வேண்டும்
என்ற இயக்கத்தில் முழு மனதுடன் நமது தளங்களில் பங்காற்றுவோம்.

அமைப்புக் குழு
பாட்டாளி வர்க்க முன்னணியினர் கழகம். (இல[...]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்